கம்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. பழைய மின் கம்பங்களையெல்லாம் அகற்றிக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் பணிகள் அதிகமாக இருந்த காரணத்தினால் முடியவில்லை. வெள்ளாமை வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கூடிய விரைவில் அந்த மின் கம்பங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஜல்லி கிரஷர்கள் இயக்கப்படுவதால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியத்தில் அத்திமுகம், வெங்கடேஷ்புரம், புக்கசாகரம், காமன்தொட்டி, கானலட்டி, கொம்மேப்பள்ளி மற்றும் பல ஊராட்சிகளில், சுமார் 60—க்கும் மேற்பட்ட பெரிய, பெரிய ஜல்லி கிரஷர்கள் இயக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் உள்ள ஜல்லி கிரஷர்களின் காரணமாக வரும் தூசு புகைமண்டலமாக மாறி, அப்பகுதியில் உள்ள விவசாய விளைநிலங்களில் உள்ள பயிர்களில் படிந்துவிடுவதால், தக்காளி, கோஸ், பீன்ஸ், வாழை மற்றும் நெல் ஆகிய பயிர்கள் எல்லாம் பாதிப்புக்குள்ளாகி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.*

மேலும், குவாரிகள் இருக்கும் இடங்களில் வெடிகள் அதிகளவில் வைக்கப்படுவதால், அங்குள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடும், அதேபோல அந்தப் பகுதிகளில் இயங்கிவரும் கிரஷர்களுக்கு தடை விதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2019 ஜூலை 20]

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி வட்டம், வெங்கடேஷ்புரம், புக்கசாகரம், அத்திமுகம் மற்றும் சில பகுதிகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று, 43 ஜல்லி கிரஷர்கள் மற்றும் M sand தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இந்த ஜல்லி கிரஷர்கள் மற்றும் M sand தயாரிக்கும் நிறுவனங்களுக்கு காற்று மாசு தடுப்பு குறித்த நிபந்தனைகளுடன்கூடிய இசைவாணையானது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின்மூலம் வழங்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இத்தொழிற்சாலைகளிலுள்ள கல் உடைக்கும் இயந்திரம், கன்வேயர், ஜல்லடை மற்றும் M sand தயாரிக்கும் இயந்திரம் போன்றவற்றில் உள்ள காற்று மாசு தடுப்பு சாதனங்களான தகட்டிலான மூடி, காற்றுவலை மற்றும் தண்ணீர் தெளிப்பான் போன்றவற்றைத் தொடர்ந்து முறையாக இயக்குவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்கள்மீது, அப்பகுதியிலிருந்து கல் மாசு மற்றும் தூசு சம்பந்தமாகப் பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்நிறுவனங்களுக்கு காற்று மாசு தடுப்பு சாதனங்களை முறையாக இயக்குமாறு அறிவுறுத்தப்பட்டு, வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

சூளகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் கல் உடைக்கும் கிரஷர்கள்மீது கடந்த ஓராண்டில் மூன்று புகார்கள் பெறப்பட்டு, வாரிய அதிகாரிகளால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கடிதம் மற்றும் காரணம் கேட்பு அறிவிக்கை முகாந்திரம் அனுப்பப்பட்டு, காற்று மாசு தடுப்பு சாதனங்களான தகட்டிலான மூடி, தண்ணீர் தெளிப்பான் மற்றும் காற்று வலை ஆகியவற்றை முறையாகப் பராமரித்து, தொடர்ந்து இயக்குமாறு அறிவுறுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

[திரு. கே.சி. கருப்பணன்] [2019 ஜூலை 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதாவது இடையூறு இருப்பின் அதைத் தெரிவித்தால், அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) குளித்தலை தொகுதி, தோகைமலை இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை என்பது 20 ஊராட்சிகளின் மையப் பகுதியாக உள்ளது. தோகைமலை இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் 3,000 பேர் பயின்று வருகிறார்கள். இதில் பெண்கள் மட்டும் 1,100 பேர் பயின்று வருகிறார்கள். ஆகவே, பெண்களின் வசதி கருதி, இந்த அரசு மேல்நிலைப் பள்ளியை தனியாகப் பிரித்து ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக அமைத்துத் தருவது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்பட்டு, அதனைப் பிரித்து, பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளி, ஆண்களுக்கான மேல்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஊ) அரக்கோணம் நகரம், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளின்போது பழுதடைந்த தெருக்களைச் சீரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச்*